# Karai Welfare Society(UK)
## காரை நலன்புரிச்சங்கம் (UK)
127 Cassiobury Drive, Watford, Herts WD1 3AH, UK
Tel 01923 226000, Fax 01923 238289, email: info@karainagar.org
www.karainagar.org Charity No 1126413


12/03/2016

**காரைநகர் நலன் புரிச்சங்கம்--- பிரித்தானியா கிளை காரை மண்ணில்....... பல புதிய திட்டங்களுக்கான 1மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு .....**

தனது சொந்த அலுவல்கள் ரீதியாக லண்டன் விஜயம் செய்திருந்த சிறுவர்கள் விவகார இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு விஜயகலா மகேஸ்வரன் அவர்களும் எமது அழைப்பை ஏற்று கூட்டத்தில் கலந்து கொண்டார்.

பிரித்தானியா காரை நலன் புரிச்சங்கம் , எமது காரை மண்ணிற்கான எங்கள் நிர்வாகக் கிளையை "காரைநகர் நலன் புரிச்சங்கம் " எனும் பெயரில் ஆரம்பித்துள்ளது. கடந்த ஞாயிறு (06/03/2016) அன்று நடைபெற்ற எமது மாதாந்த நிர்வாக சபைக் கூட்டத்தில் இந்த உத்தியோகபூர்வ முடிவுகள் அறிவிக்கப்பட்டன..

பிரித்தானியா காரை நலன் புரிச்சங்கத்தின் இனிவரும் எதிர்கால வேலைத்திட்டங்களை துரிதமான, கண்ணியமான முறையில் அமுல்படுத்த இக்கிளை உறுதுணையாக செயல்படும். இந்த நிர்வாகக் கிளையில் காரை மண்ணின் முக்கிய பிரமுகர்கள், ஊர்பற்றாளர்கள், கொடை வள்ளல்களும் இணைத்திருப்பது காரை மண்ணின் ஒரு புதிய திருப்புமுனை என்றே கொள்ளலாம். எமது பிரித்தானியா காரை நலன் புரிச்சங்க நிர்வாகத்தினரால் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்ட காரைநகர் கிளையின் நிர்வாக அங்கத்தவர்கள் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.
காரைக் கிளையின் நிர்வாக அங்கத்தவர்கள் விபரம் வருமாறு:-

1. திரு.க. சோமசேகரம் JP - தலைவர்
2. திரு சி. நேசேந்திரம் - உப தலைவர்
3. திரு. ந. கணேசமூர்த்தி - செயலாளர்
4. திரு. செ .கந்தசாமி - உப செயலாளர்
5. திரு .ப .ஜங்கரன் - பொருளாளர்

நிர்வாக சபை அங்கத்தவர்கள்

6. திரு S .K .சதாசிவம்
7. திரு . E.S.P . நாகரட்ணம்
8. திரு . S .சிவஞானம்
9. திரு. N. யோகநாதன்
10. திரு .S .ஆறுமுகம்
11. திரு. S .கணநாதன்
12. திரு .K .பிரதீபன்
13. திரு. A . முருகவேல் .

மேலும் எமது கடந்த நிர்வாக சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்ட பல முக்கிய வேண்டுகோள்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் அங்கீகரிக்கப்பட்டு, எமது காரைநகர் கிளையினூடு அமுல்படுத்துவதென அறிவிக்கப் பட்டது. அவற்றில் ஒருசில திட்டங்களாவன :-

1. "காரை 2020"

கடந்த மாதம், எமது மன்றத்தின் போஷகர் திரு.ப. தவராஜா அவர்களின் காரைநகர் விஜயத்தின்போது காரைநரில் உள்ள விளையாட்டுக் கழகங்களுடனான ஒன்றுகூடல் ஒன்றை பிரதேச செயலரின் உதவியுடன் நடாத்தியிருந்தார். இதன்போது அங்குள்ள 12 முதன்மை விளையாட்டு கழகங்கள் (பதிவு செய்யப்பட்ட ) அழைக்கப்பட்டிருந்தன. இதில் 10 கழகங்களின் பிரதிநிதிகள் சமூகமளித்திருந்தனர் . இவர்களுடன் திரு SK சதாசிவம் மாஸ்டர், திரு.க .சோமசேகரம் JP, திரு .P .ஜங்கரன், திரு S .சன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பிரதேச செயலகத்தின் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்(S .O ) திரு பிரசன்னா அவர்கள் அழைக்கப்பட்டிருந்த போதும் தவிர்க்க முடியாத காரணத்தினால் சமூகமளிக்க முடியவில்லையென அறிவித்திருந்தார். நிகழ்வில் உரையாற்றிய அனைவரும் ஒரு இளம் சமூகத்தின் விளையாட்டுத்துறையின் முக்கியத்துவத்தையும், விளையாட்டு ஒழுக்கத்தை பற்றியும் பல வரலாற்று உதாரணங்களுடன் எடுத்துரைத்தனர்.

"காரை ஐக்கிய விளையாட்டு கழகம் - KARAI UNITED SPORTS CLUB "

மேலும் தற்பொழுதுள்ள ஒவ்வொரு விளையாட்டு கழகங்களில் இருந்தும் திறமைவாய்ந்த முன்னணி வீரர்களை ஒன்றிணைத்து "ஐக்கிய காரை விளையாட்டு கழகம்" ( "KARAI UNITED SPORTS CLUB ") என்ற ஒன்றை உருவாக்குவதற்கான ஆரம்ப செயல்திட்டங்களும் கலந்தாலோசிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த கலந்துரையாடலின் முக்கிய நோக்கமாக எதிர்காலத்தில் விளையாட்டுத்துறையை ஊக்குவிப்பதற்கும், இளையோர் சமூகத்தை கட்டுக்கோப்பான, ஆரோக்கியமான, ஊர்பற்று கொண்ட, எமது மன்றங்களுடன் இணைந்து எமது எதிர்கால வேலைத்திட்டங்களில் பங்கேற்கும் சமூகமாக வளர்த்தெடுப்பதுமாகும்.

எந்த ஒரு குடும்பத்திலோ, கிராமத்திலோ, நாட்டிலோ இளையோர் ஆக்கங்கள், எண்ணங்கள் நேரிய சிந்தனையுடையதாகவுள்ளதோ அந்த இடம் முனேற்றப் பாதையில் போகின்றது என்று அர்த்தம்.

இதைத்தான் சுவாமி விவேகனந்தர் 100 முற்போக்கான இளைஞர்களை கொடுங்கள் சுதந்திரமான, சுபீட்சமான இந்தியாவை உருவாக்கி காட்டுகின்றேன் என்றார்.

மேலும் இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்ட கழகங்களின் அத்தியாவசிய தேவைகள் எழுத்துமூலம் கோரப்பட்டிருந்தன, இதன் பிரகாரம் 7கழகங்கள் தங்கள் கோரிக்கைகளை கையளித்திருந்தன.

இக் கோரிக்கைகள் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டு முதற்கட்டமாக கோரிக்கைகளை வழங்கிய அனைத்து கழகங்களுக்கும் தலா 50,000.00(ஐம்பதுனாயிரம் ) ஆயிரம் ரூபாய்கள் விகிதம் வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது.

மேலும் எமது புலம்பெயர் சகோதர மன்றங்களையும் இத் திட்டத்தில் இணைத்துக்கொள்ளும் முகமாக இக்கோரிக்கைகளின் நகல் பிரதிகள் அனைத்தும் எமது சகோதர மன்றங்களான கனடா கலாச்சார மன்றம், பிரான்ஸ் காரை நலன் புரிச்சங்கம் மற்றும் சுவிஸ் காரை அபிவிருத்தி சபை என்பவற்றிற்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

முன்னெடுத்திருக்கும் இந்த திட்டத்தை "காரை 2020" என நாம் நாமித்துள்ளோம். 2020ம் ஆண்டில் காரை மண் எவ்வாறு அமையவேண்டும் என்பதே இதன் நோக்கம்.

2. "காரை மெய்வல்லுனர் கழகம் " ("KARAI ATHLETICS ASSOCIATION ")

மெய்வல்லுனர் துறைகளில் திறமையுள்ள, ஆர்வமுள்ள அனைத்து இளையோரையும் இனம்கண்டு அவர்களுக்கான அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து மாவட்ட , மாகாண மற்றும் தேசிய போட்டி மட்டங்களுக்கு எடுத்துச்செல்ல உறுதுணை புரிதல்.

சமீபகாலத்தில் முப்பாய்ச்சல் பிரிவில் தேசியமட்டம் வரை பங்குபற்றிய சிவசக்திவேல் கோகுலன்(காரை இந்துக் கல்லூரி ) என்ற மாணவனுடனான நேரடி தொடர்பாடல் மூலம் அறியமுடிந்தது யாதெனில் ....

" எனக்கு இன்னும் கொஞ்சம் மேலதிக வசதி வாய்ப்புக்கள் தகுந்த நேரத்தில் கிடைத்திருந்தால், நான் நிச்சியமாக ஒரு சாதனை படைத்திருப்பேன்"

எனவே இன்னும் இப்படி பல கோகுலன்கள் கோபுரங்களின் இடி பாடுகளில் மறைந்து போகிறார்கள். முடிந்தவரை கைகொடுப்போம்.

# Karai Welfare Society(UK)
## காரை நலன்புரிச்சங்கம் (UK)
127 Cassiobury Drive, Watford, Herts WD1 3AH, UK
Tel 01923 226000, Fax 01923 238289, email: info@karainagar.org
www.karainagar.org Charity No 1126413


3. "காரைக் கணனிப் பயிற்சி நிலையம்"

எமது மன்றத்தின் முழுமையான உதவி வழங்கலின் மூலம் வரும் ஏப்ரல் மாத இறுதிக்குள் ஆலடிப்பகுதிக்கு அண்மையாக கணனிப் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஓர் நிறுவனத்திடமிருந்து அன்பளிப்பு மூலம் கிடைக்கப் பெற்ற பாவனையிலிருந்த 8கணனிகள் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டு ஒருங்கமைப்பாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

4. குளம் விரிவாக்கலுக்கு இடம் கொள்வனவு செய்து வழங்கல்

சுப்பபிரமணியம் வீதியில் அமைந்துள்ள கல்லட்டிக் குளத்தை மேலும் விரிவாக்குவதற்கு, இதனை அண்டியுள்ள காணியை கொள்வனவு செய்து வழங்கல். இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. சைவ மகா சபையின் அறநெறிப் பாடசாலை திருக்குறள் போட்டிக்கு அனுசரணை.

எமது காரைநகர் சைவ மகா சபையானது நீண்டகால இடைவெளியின் பின்னர் தனது பணிகளை ஆரம்பித்த இத் தருணத்தில், காரைநகர் மற்றும் தீவகம், சங்கானை அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே திருக்குறள் போட்டி நடாத்தப்பட்டது. இப் போட்டியில் நூற்றுக்கணக்கானோர் பங்கு கொண்டு சிறப்பித்தனர்.

இவர்களுக்கான பர்சில்கள் வழங்க்குவதற்கு ரூபாய் 25,000.00 மும் , சைவ மகா சபை முன்பக்க புனருத்தாரண வேலைக்கான பங்களிப்பாக ரூபாய் 15,000.00 வழங்கப்படுகின்றது.

6. "முதுசங்களைத்தேடி" நூல் வெளியீட்டு நிதியில் இருந்து ரூபாய் 50,000.00 நிதி வழங்கல்

சைவ ஆசிரியர்களைத் தோற்றுவித்த ஆசான் ஸ்ரீ அருணாசலம் அவர்களின் நூல் 2ம் பதிப்பினை சைவசித்தாந்த மன்றம் கனடாக் கிளை கடந்த வருடம் வெளியிட்டிருந்தது. மேற்படி நூலின் 100 பிரதிகளை வடமாகணத்திற்குட்பட்ட 1 AB பாடசாலை நூலகங்களுக்கு ஒரு பிரதி விகிதம் கொண்டு சேர்ப்பதற்கான உதவித் தொகையான( பிரதிகளுக்கான பெறுமதித்தொகை) ரூபாய் 50,000.00 (ஐம்பதுனாயிரம் )-வழங்கப்படுவதென உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் மாகாணகல்வித் திணைக்களத்தினூடு கொண்டு சேர்க்கப்பட்டுள்ளது.

இதை வரவேற்று, நன்றி தெரிவித்த வடமாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் திரு .செல்வின் இறேனியுஸ் மேலும் தனது நன்றிக் கடிதத்தில், எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் இவ்வாறான பயனளிக்கும் நற்பணிகளில் தங்கள் மாகாண மாணவர்கள் பெற்றுக்கொள்வதையும் கவனத்தில் கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார். இத் திட்டத்தை செவ்வனே நடாத்தி முடித்த திரு S .K .சதாசிவம் மாஸ்டர் அவர்களுக்கும், கனடா சைவசித்தாந்த மன்றத் தலைவர் அவர்களுக்கும் எமது நன்றிகளும் உரித்தாகுக. இந் நிதி "முதுசங்களைதேடி" நூல் வெளியீட்டு நிதியில் இருந்து வழங்கப் படுகின்றது.

மேலும் எமது மன்றத்திற்கு கிடைக்கப்பெற்ற கீழ்காணும் கோரிக்கைகளும் கவனத்தில் கொள்ளப்பட்டன.

மருதபுரம் அபிவிருத்தி சபையினரால் வழங்கப்பட்ட கோரிக்கைகளும் ஆராயப்பட்டு, மேலதிக தவகல் விபரத்திற்காக எமது காரைநகர் கிளையின் உதவி நாடப்பட்டுள்ளது.

வலந்தலை தெற்கு அ.மி.த.க பாடசாலையின் மைதான காணி கொள்வனவு கோரிக்கை (அப்புத்துரை பாடசாலை ),

வலந்தலை வைத்தியசாலை கோரிக்கைகள்( இரத்த பரிசோதிப்பு உபகரணம்,, X ray கருவி என்பன கொள்வனவு ),

# Karai Welfare Society(UK)
## காரை நலன்புரிச்சங்கம் (UK)
127 Cassiobury Drive, Watford, Herts WD1 3AH, UK
Tel 01923 226000, Fax 01923 238289, email: info@karainagar.org
www.karainagar.org Charity No 1126413


தங்கோடை கிராம அபிவிருத்தி சங்கத்தினரால் வழங்கப்பட்டிருந்த தங்கோடை முன்பள்ளிக்கான தண்ணீர் தாங்கி அமைத்தல், மற்றும் சுடலைகள் புனருத்தாரண வேலைகள் சம்பந்தமான வேலைத்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் என்பனவும் பரிசீலிக்கப்பட்டு மேலதிக தவல்களுக்காவும், உயர் ஆலோசனைக்காகவும் அடுத்த நிர்வாக சபைக் கூட்டம் வரை ஒத்திவைக்கப் பட்டுள்ளது.
மேற்குறிப்பிடப்பட்ட நிதி ஒதுக்கீடுகள்யாவும், பதிவு செய்யப்பட்ட எமது காரைநகர் கிளையினூடு வழங்கப்படும்.

எமது பிரித்தானியா காரை நலன் புரிச் சங்கத்தின், புதிய காரைநகர் கிளையின் நிர்வாகத்தினருக்கு எமது நல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

கணக்காயர் இல்லாத ஊரும், பிணக்கு அறுக்கும்
மூத்தோரை இல்லா அவைக் களனும், பார்த்து உண்ணாத்
தன்மையிலாளர் அயல் இருப்பும், - இம் மூன்றும்
நன்மை பயத்தல் இல.
திரிகடுமம் -10

நன்றி,
நிர்வாகம்,
பிரித்தானியா காரை நலன் புரிச்சங்கம் .


President: Mr S .Konesalingam 07944232014
Secretary: Mr S Panchadcharam 07737121187
Treasurer: Mr B Kajendran 07951993073